**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452 - 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

16.08.11

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 06.08.2011 முதல் 12.08.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**06-08-2011 முதல் 12-08-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | 1 |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 1 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 29 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 8 |
| 5. | வகுப்பறை வன்முறை | 6 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 3 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 4 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 1 |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | 1 |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 5 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | – |
| 17. | மணல் கொள்ளை | 1 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | 1 |

| | | |
|---|---|---|
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 4 |
| | மொத்தம் | 68 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-31
## 6.08.2011 முதல் 12.08.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 2013. | 06.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே காளையார்குறிச்சியில் கனகபிரபு என்பவருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் எற்பட்ட தீவிபத்தில் 7 பெண் தொழிலாளர்கள் உயிரிழப்பு. 5 தொழிலாளர்கள் காயம். | பட்டாசு ஆலை தீ விபத்து | தினமணி |
| 2014. | 07.08.2011 | **மதுரை மாவட்டம்:** எழுமலை அருகே அனுமதியின்றி மணல் அள்ளிய மகேந்திரன்(37), சரவணன்(29), பாண்டி(27) கைது. டிராக்டர் பறிமுதல். | மணல் கொள்ளை | தினகரன் |
| 2015. | 07.08.2011 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி அருகே சாணார்பட்டியைச் சேர்ந்த வையாபுரி மனைவி ருக்மணி(50). வீட்டில் தனியாக இருந்த ருக்மணியை 4 மர்ம நபர்கள் தாக்கியதோடு நகையை பறித்துச் சென்றதாக ருக்மணி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2016. | 07.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் மாணவர்களுக்கான தனித்திறன் போட்டிகள் தொடங்கி வைக்க மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் ராதாகிருஷ்ணன் வருவதாக தகவல். காலையில் இருந்து குழந்தைகள் வெயிலில் காத்துக் கிடந்ததாக பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 2017. | 07.08.2011 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்புவனம் அருகே உள்ள ஆதிக்கரையைச் சேர்ந்த தவமணி உறவுப் பெண் மதுரை அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதி. விசாரிக்க வந்த காவலர்களுக்கும் மருத்துவருக்கும் இடையே மோதல். மருத்துவமனையில் காவலர்கள் தரக்குறைவாக நடந்துக் கொண்டதால் மருத்துவமனை பயிற்சி மருத்துவர்கள், மற்று மருத்துவர்கள் திடீர் போராட்டம். | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 2018. | 07.08.2011 | **மதுரை மாவட்டம்:** கீழவளவு போலீஸ் சரகம் முத்துப்பட்டியைச் சேர்ந்த அமுதா(45). அதே பகுதியைச் சேர்ந்த சந்திரன் அமுதாவை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. அமுதா மறுப்பு. ஆத்திரமடைந்த சந்திரன் அமுதாவை அரிவாளால் வெட்டியதால் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 2019. | 07.08.2011 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டியைச் சேர்ந்த ஆனந்த் மனைவி பானுமதி(22). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த பானுமதி விஷம் குடித்துத் தற்கொலை. தனது மகளின் சாவில் மர்மம் இருப்பதாக பானுமதி தந்தை புகார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 2020. | 07.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் பெரியார் நகரைச் சேர்ந்த செல்வக்குமார் மனைவி தனவள்ளி. நீலகண்டி ஊரணி பகுதியைச் சேர்ந் ராமநாதன் தனியாக சென்ற தனவள்ளியிடம் இருந்து 10 பவுன் நகையை பறிக்க முயன்றபோது கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2021. | 07.08.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கடலாடி தாலுகா எ.புனவாசல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க் காப்பீட்டு தொகையில் முறைகேடு செய்த எ. புனவாசல் கிராம நிர்வாக அதிகாரி சரவணன், மற்றும் கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் நாராயணன் இருவரும் பணிநீக்கம். | முறைகேடு | தினத்தந்தி |
| 2022. | 08.08.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** கள்ளக்குறிச்சி காந்தி சாலையைச் சேர்ந்த சுரேஷ் மகள் ரம்யா ஏகேடி பள்ளியில் யூ.கே.ஜி படித்து வந்தார். எல்.கே.ஜி வகுப்பு ஆசிரியர் ஜினோபோர்ஷயாவும்(28), தலைமை ஆசிரியர் லிஷிபோஸ்கோவும் சிறுமியை பாலியல் செய்ததாகப் புகார். | வகுப்பறை வன்முறை & குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தீக்கதிர் |
| 2023. | 08.08.2011 | **மதுரை மாவட்டம்:** பெத்தானியாபுரத்தைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் சுந்தரராஜ்(41) கரிமேடு காவல்நியைத்தைச் சேர்ந்த காவலர்கள் பொய் வழக்குப்போட்டு சுந்தரராஜை கைது. காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பெண்கள் காவல்நிலைத்தை முற்றுகை. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2024. | 08.08.2011 | **வேலூர் மாவட்டம்:** ராணிப்பேட்டை கிருஷ்ணன் மனைவி பச்சையம்மாள். பச்சையம்மாள் தம்பி பழனி(30). இருவரின் குழந்தைகளுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த பழனி பச்சையம்மாளை கத்தியால் குத்திக் கொலை செய்ததாக புகார். பழனி கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 2025. | 08.08.2011 | **சென்னை மாவட்டம்:** குரோம்பேட்டை அடுத்த அஸ்தினாபுரம், அண்ணாநகர் பகுதியில் முத்துமாரியம்மன் கோயில் திருவிழாவில் வணிகர் சங்கம் சார்பில் கோயில் விழாவில் கச்சேரி. காவலர்கள் அனுமதித்த நேரத்தை விட 5 நிமிடம் அதிகமானதால், காவலர்கள் தகாத வார்த்தைகள் கூறி சங்க செயலாளர் சேவியரை கைது செய்துள்ளனர். வியாபாரிகள் காவல்நிலையத்தை முற்றுகை. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2026. | 08.08.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூர் ராயக்கோட்டை ஹட்கோ பகுதியைச் சேர்ந்த ஒசூரை அடுத்த பேரிகை காவல் நிலைய | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | எஸ்ஐயாக பணியாற்றும் நாகராஜ் மகள் அஸ்வினி(23). அஸ்வினி தூக்கிட்டுத் தற்கொலை. போலீசாருக்கு தெரிவிக்காமல் அஸ்வினின் சடலத்தை அடக்கம் செய்ததாக எஸ்ஐ நாகராஜ் பணிநீக்கம். | | |
| 2027. | 08.08.2011 | **சேலம் மாவட்டம்:** வாழப்பாடியைச் அடுத்த திருமானூர் வீனஸ் வித்யாலயா பள்ளியில் யுகேஜி படித்து வரும் மாணவி தேவி(5). அந்த பள்ளியின் வேன் டிரைவர் மணிகண்டன்(17) மாணவி தேவியை பாலியல். புகார். மணிகண்டன் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 2028. | 09.08.2011 | **தேனி மாவட்டம்:** பெரியகுளம் அருகில் உள்ள வடுகபட்டியில் வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்த ராசு, முனியம்மாள். அரசு வழங்கிய 3 சென்ட் இடத்திற்கான பட்டாவை செல்வம் என்பவரிடம் அடகு வைத்துக் கடன் வாங்கியுள்ளனர். செல்வம் 3 சென்ட் இடத்தை ஆக்கிரமித்து ராசு முனியம்மாள் மீது தாக்குதல். | நிலம் ஆக்கிரமிப்பு & தலித்துகள் மீதான வன்முறை | Hindu |
| 2029. | 09.08.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழநி புதுநகரைச் சேர்ந்த சொக்கநாதன் மகள் ரேகா. சின்னாளபட்டியைச் சேர்ந்த ஆனந்த். இருவருக்கும் திருமணம் நடந்தது. போலி கிரெடிட் கார்டு கும்பலைச் சேர்ந்த ஆனந்த் ரேகாவை மோசடிக்கு பயன்படுத்தியுள்ளார். அவரது கும்பல் ரேகாவிற்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததால் மனமுடைந்த ரேகா தற்கொலை. சொக்கநாதன் புகார். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 2030. | 09.08.2011 | **மதுரை மாவட்டம்:** கோ. புதூரைச் சேர்ந்த நர்மதா(32) தாம்பரத்தைச் சேர்ந்த சந்தோஷ்(42). இருவருக்கும் திருமணம் நடந்தது. கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாக நர்மதா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரட்சணைக் கொடுமை | தினகரன் |
| 2031. | 09.08.2011 | **மதுரை மாவட்டம்:** பாலமேடு பகுதியைச் சேர்ந்த பாக்யராஜ் மனைவி போதும்பொண்ணு(19). பாக்கியராஜ் மற்றும் உறவினர்கள் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக கணவர் உட்பட உறவி னர்கள் 10 பேர் மீது போதும்பொண்ணு புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரட்சணைக் கொடுமை | தினகரன் |
| 2032. | 09.08.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை கொட்டரக்குளத்தைச் சேர்ந்த சிவன்பாண்டி கல்லீரல் சிகிச்சைக்காக நெல்லை தனியார் மருத்துவமனையில் சேர்ந்தார். மருத்துவமனையில் நர்சுடன் டாக்டர் உல்லாசமாக இருந்ததை சிவன்பாண்டி பார்த்ததால் மருத்துவர் தன்னை விஷ ஊசி போட்டு கொலை செய்ய முயன்றதாக மருத்துவர் மீது சிவன்பாண்டி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2033. | 09.08.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** கல்பாக்கம் அடுத்த முகையூர் கிராமத்தில் முத்தாலாம்மன் கோயில் திருவிழாவில் ஒருபிரிவினர் கோயில் உள்ள நுழைய ஆதிக்கச்சாதியினர் மறுப்பு. இருபிரிவினர் இடையே மோதல். புகார் அளித்தும் காவல்துறை நடவடிக்கை எடுக்க மறுப்பு. | தலித்துகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2034. | 09.08.2011 | **தேனி மாவட்டம்:** போடேந்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்த மாடசாமி மகன் பாலமுருகன்(38). தனது நிலத்தை நிதியமைச்சர் ஒ. பன்னீர்செல்வத்தின் தம்பி ராஜா கேட்டு கொடுக்க மறுத்ததால் ராஜாவின் தூண்டுதலால் காவலர்கள் தன் மீதும் தன் குடும்பத்தார் மீதும் பொய் வழக்கு போட்டுள்ளதாக மாடசாமி கலெக்டரிடம் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 2035. | 09.08.2011 | **மதுரை மாவட்டம்:** பாலமேடு அருகே சேத்தமங்கலத்தைச் சேர்ந்த பிரபு மனைவி சரிதா(20). கணவன் மனைவி குடும்பத் தகராறில் இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். இதனால் மனமுடைந்த சரிதா குளத்தில் குதித்து தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 2036. | 09.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** வெம்பக்கோட்டை ஒன்றியம், அன்பின்நகரம் கிராமத்தில் எஸ்.பி.எம்.தனியார் பள்ளி உள்ளது. இப்பள்ளியில் மாணவர்களுக்கு தேவையாக அடிப்படை வசதி இல்லை என்றும். மற்றும் போதுமான ஆசிரியர்கள் இல்லை என்றும், பள்ளியில் கூடுதல் கட்டிடம் கட்ட வேண்டும் என்றும் இப்பகுதியில் அரசு பள்ளி துவங்க வேண்டும் என 70 மாணவ, மாணவியர்கள் ஒரே நாளில் மாற்று சான்றிதழ் (டிசி) பெற்றுக்கொண்டு வேறு பள்ளியில் சேர்ந்தனர். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 2037. | 10.08.2011 | **தருமபுரி மாவட்டம்:** சூரியக்கடையில் உள்ள பழங்குடியின மக்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளி இப்பள்ளியின் தலைமை ஆசிரியராக சாதிக்பாட்சா பணிபுரிகிறார். இவர் பள்ளிக்கு வருவதில்லை, பள்ளி மாணவர்களுக்கு பள்ளியின் காவலர் பாடம் எடுக்கும் அவலம். | வகுப்பறை வன்முறை & பழங்குடியின மக்கள் மீதான வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 2038. | 10.08.2011 | **சேலம் மாவட்டம்:** சென்னை முகப்பேர் 3–வது பிளாக்கைச் சேர்ந்த ரோஸ்மேரி(27). கோயம்பேட்டில் உள்ள ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் பணிபுரியும் ரியாஸ்(29). இருவரும் காதலித்துத் திருமணம் செய்தனர். இந்நிலையில் ரியாஸ் ஏற்கனவே இருபெண்களை ஏமாற்றி திருமணம் செய்துள்ளதாகவும், தன்னையும் ஏமாற்றியதாக ரோஸ்மேரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 2039. | 10.08.2011 | **மதுரை மாவட்டம்:** செல்லூர் கண்மாய்கரையைச் சேர்ந்த ராமுத்தாய்(36). மேலத்தோப்பைச் சேர்ந்த ராமன்(28) ராமுத்தாயிடம் பணம் பறித்ததோடு, ஆபாசமாக பேசியதாக ராமன் மீது புகார். ராமன் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2040. | 10.08.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் காமராஜபுரம் வடபகுதியைச் சேர்ந்த சீனிவாசன் மகன் நவீன்பாபு(10). பள்ளிக்குச் செல்வதாக சென்ற சிறுவனைக் காணவில்லை என புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 2041. | 10.08.2011 | **மதுரை மாவட்டம்:** செக்கானூரணியைச் சேர்ந்த ராஜேந்தரன் மகள் புவனாஸ்ரீ(13). குடும்பத்தகராறில் மனமுடைந்த மாணவி தற்கொலை. காவலர்களுக்கு தெரியாமல் பிணத்தை எரியூட்டியாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமணி |
| 2042. | 10.08.2011 | **மதுரை மாவட்டம்:** ஜெய்ஹிந்துபுரம் பாரதியார் தெருவைச் சேர்ந்த கணபதி மனைவி அமுதா(39). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த கணபதி அமுதாவை கத்தியால் குத்திக் கொலை செய்ததோடு, கணபதியும் விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமணி |
| 2043. | 10.08.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** மதுராந்தக ஒன்றியம், லட்சுமிநாராணயபுரம் ஊராட்சிக்குட்ட மாத்தூர் கிராமத்தில் உள்ள ஆத்திராவிடர் நலத்துறை தொடக்கப்பள்ளியில் 50 மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர். இப்பள்ளியில் ஆசிரியர் மற்றும் தலைமையாசிரியர் குறித்த நேரத்திற்கு பள்ளிக்கு வராததால் பெற்றோர் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் போராட்டம். | வகுப்பறை வன்முறை | மார்சல் |
| 2044. | 10.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டையைச் சேர்ந்த வேலாயுதம் மனைவி முத்துக்கனி(32). முத்துக்கனியைக் காணவில்லை என புகார். காவலர்கள் கோர்ட்டில் முத்துக்கனியை ஒப்படைக்கும் போது கணவருடன் செல்ல விருப்பம் இல்லை என முத்துக்கனி புகார். ஆத்திரமடைந்த வேலாயுதம் முத்துக்கனியை கத்தியால் குத்தி கொலை செய்ய முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தமிழ்சுடர் |
| 2045. | 10.08.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டியைச் சேர்ந்த புவனேஸ்வரி இவர் மதுரை விளக்குதூண் போலீஸ் நிலையத்தில் சப்–இன்ஸ்பெக்டராக வேலை செய்கிறார். புவனேஸ்வரியின் கணவர் குமார். கணவன் மனைவி குடும்பத்தகராறில் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தனர். புதூர் பேருந்து நிறுத்தம் | பெண்கள் மீதான வன்முறை & கொலை மிரட்டல் | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருகே நின்றுக் கொண்டிருந்து போது புவனேஸ்வரியை குமார் அவதூறாக பேசி மிரட்டியதாக புவனேஸ்வரி புகார். | | |
| 2046. | 10.08.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை சொக்கலிங்கம் எம்.டி.ஆர் நகர் 1 வது தெருவைச் சேர்ந்த ரத்தினம் மனைவி புஷ்பலதா. கணவர் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாக புஷ்பலதா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தமிழ்சுடர் |
| 2047. | 10.08.2011 | **சேலம் மாவட்டம்:** ஆத்தூரைச் சேர்ந்த ஆனந்தராஜ்(25) மனைவி சரஸ்வதி. திருமணமாகி 9 மாதங்களே ஆன நிலையில் கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த ஆனந்தராஜ் தனது நண்பர் கட்டையன் இருவரும் சேர்ந்து சரஸ்வதியை கழுத்தை நெறித்துக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தமிழ்சுடர் |
| 2048. | 10.08.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தை சேர்ந்த நகாராஜன் மனைவி சங்கீதா(35). டி.கல்லுப்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக வேலை செய்கிறார். பள்ளிக்கு பேருந்தில் இருந்து இறங்கிச் செல்லும்போது பைக்கில் வந்த 2 வாலிபர்கள் நகையை பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 2049. | 10.08.2011 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடை அருகே நரசிங்கம்பட்டியைச் சேர்ந்த தியாகராஜன் மகள் ரேவதி(19). நாகமலைபுதுக்கோட்டையில் வசிக்கும் நாகேந்திரன் மகன் மனோஜ்குமார்(20). இருவரும் காதலித்தனர். ரேவதியை மனோஜ்குமார் திருமணம் செய்ய மறுப்பு. இரு குடும்பத்தினரிடையே மோதல். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2050. | 11.08.2011 | **கோவை மாவட்டம்:** ஜேம்ஸ், சைலஜா இவர்களின் மகளான ஜிம்சா(16) கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அப்பொழுது அச்சிறுமிக்கு தவறாக சிசிக்சைப்பார்க்கப்பட்டது. இதனால் அச்சிறுமியின் விரல் நீல நிறம் அடைந்ததோடு, செயல்படவில்லை. | குழந்தைகள் மீதான வன்முறை & மருத்துவர்கள் அலட்சியம் | கலைஞர் டிவி |
| 2051. | 11.08.2011 | **திருநெல்வேலி மாவட்டம்:** நெல்லை ஆழ்வார்குறிச்சியில் உள்ள பரமகல்யாணி கல்லூரியில் படிக்கும் மாணவிகள். வேதியல்துறை பேராசியர் பொன்னுசாமி மாணவிகளை பாலியல் தொந்தரவு செய்வதாகப் புகார். | மாணவிகள் மீதான பாலியல் வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 2052. | 11.08.2011 | **திருச்சி மாவட்டம்:** துறையூர் முத்து நகரைச் சேர்ந்த பொன்னன் மகள் சங்கீதா(19). ராஜசேகர் இருவரும் காதலித்தனர். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருவருக்கும் ஏற்பட்ட வாய்த்தகராறில் ஆத்திரமடைந்த ராஜசேகர் சங்கீதாவை இரும்பு கம்பியால் அடித்துக் கொலை ராஜசேகர் கைது. | & கொலை | |
| 2053. | 11.08.2011 | **சென்னை மாவட்டம்:** திருப்பூரைச் சேர்ந்த பேச்சிமுத்து மகள் அம்சவேணி(15). தந்தையுடன் ஏற்பட்ட தகராறில் சென்னை சென்றவரை காவலர்கள் சந்தேக வழக்கில் கைது. பெற்றோருடன் செல்லுமாறு காவலர்கள் கூறியுள்ளனர். மறுத்த மாணவி 35 விபசார வழக்கில் கைதான பெண்களுடன் பெண்கள் பாதுகாப்புஇல்லத்தில் தங்கியுள்ளார். துர்க்காதேவியின் படிக்க வேண்டும் என்ற ஆசையை சென்னை ஐகோர்ட்டுக்கு கோரிக்கையாக எழுதியுள்ளார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2054. | 11.08.2011 | **மதுரை மாவட்டம்:** மேலவளவு அருகில் உள்ள ஆலம்பட்டி இவ்வூரில் வசிக்கும் பெரியகருப்பன் மகள் ராக்கு(23) மனநலம் பாதிக்கப்பட்டவர். பக்கத்து வீட்டில் வசிக்கும் பாண்டி(67) ராக்குவை பாலியல். பாண்டி கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2055. | 11.08.2011 | **திருச்சி மாவட்டம்:** உசிலம்பட்டி மாமரத்துப்பட்டி ரோட்டில் பஞ்சாலை ஆபீஸ் தெரு சாக்கடையில் ஆறுமாத ஆண் குழந்தை இறந்த நிலையில் கிடந்தாக பொதுமக்கள் புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2056. | 11.08.2011 | **கரூர் மாவட்டம்:** நெய்தலூர் காலனியைச் சேர்ந்த சுந்தர்ராஜன்(50). தனது மில்அருகே உள்ள மின் கம்பத்தை வேறு இடத்திற்கு மாற்றக்கோரி மின்வாரிய உதவி பொறியாளர் நாராயணனை அணுகினார். அவர் ரூபாய் 2000 லஞ்சம் கேட்டதாக சுந்தர்ராஜன் புகார். நாராயணன் கைது. | லஞ்சம் | தினகரன் |
| 2057. | 11.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு 5 வது வார்டில் இரவு பணியில் இருந்த மருத்துவர் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க மறுத்ததோடு, போதையில் நிர்வாணமாக ஆட்டம் போட்டதால் நோயளிகள் மற்றும் செவிலியர்கள் பயந்து ஓட்டம். மருத்துவமனையில் பரபரப்பு. | போதையில் மருத்துவர் | தினகரன் |
| 2058. | 11.08.2011 | **காஞ்சீபுரம் மாவட்டம்:** கல்பாக்கம் அடுத்த முகையூர் கிராமத்தில் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் முத்தாலம்மன் கோயில் திருவிழாவில் சாமி கும்பிடுவதில் இருபிரிவினரிடையே மோதல். கோயிலுக்குக் காவலர்கள் பூட்டுபோட்டனர். அங்கு ஊரடங்கு உத்தரவு. | தலித்துகள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2059. | 12.08.2011 | **ஈரோடு மாவட்டம்:** கோபி, வண்டிப்பட்டியைச் சேர்ந்தவர் சலீம். பக்கத்து வீட்டைச் சேர்ந்த கணேசமூர்த்தி அவரது மனைவிக்கும் நடந்த தகராறை சலிம் விலக்கியுள்ளார். ஆத்திரமடைந்த சலீம் கணேசமூர்த்தியை கத்தியால் குத்தியுள்ளார். கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட சலீம் காவல் நிலையத்தில் இரவு 12 மணியளவில் மயக்கம். கோபி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் சலீம் இறந்தாக புகார். காவலர்கள் அடித்ததால் சலீம் இறந்ததாக உறவினர்கள் புகார். | காவல்நிலைய சித்திரவதை & காவல்நிலைய மரணம் | SunNews |
| 2060. | 12.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேலப்பெருமாள் மேஸ்திரி வீதியைச் சேர்ந்த ராஜன்(42) மனைவி கீதாபாய்(38). கூடுதல் வரதட்சணை கேட்டு கணவர் துன்புறுத்தியதால் மனமுடைந்த கீதாபாய் தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 2061. | 12.08.2011 | **மதுரை மாவட்டம்:** அனுப்பானடியைச் சேர்ந்த பஞ்சு மகள் சாந்தா(23) அதே பகுதியைச் சேர்ந்த ஜெனிபர் ராஜ்குமார் இருவரும் காதலித்தனர். சாந்தாவை ராஜ்குமார் தாய், தந்தை மற்றும் உறவினர்கள் கடத்திச் சென்றதாக பஞ்சு புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2062. | 12.08.2011 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூரைச் சேர்ந்த சின்னப்பா மகள் சந்திரிகாவை(21). பக்கத்து வீட்டில் வசித்த ஆனந்த மற்றும் அவரது குடும்பத்தார் சந்திரிகாவை கடத்திச் சென்றதாக சின்னப்பா புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2063. | 12.08.2011 | **மதுரை மாவட்டம்:** பெரிய உலகனேரியைச் சேர்ந்த மாயழகு மகள் லதா(16). அதே பகுதியைச் சேர்ந்த பரமசிவம்(26) லதாவைக் கடத்திச் சென்றதாக மாயழகு புகார். | பெண்கள் மீதான வன்முறை &கடத்தல் | தினகரன் |
| 2064. | 12.08.2011 | **மதுரை மாவட்டம்:** மேல அனுப்பானடியைச் சேர்ந்த பாண்டி மனைவி வேலம்மாள், காட்டுநாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த 60 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். விருதுநகர் ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த காவலர்கள் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து தனது கணவரை சித்திரவதை செய்ததால் பாதிக்கப்பட்ட பாண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதி. தனது கணவரை சித்திரவதை செய்த காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வேலம்மாள் கலெக்டரிடம் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தினமணி |
| 2065. | 12.08.2011 | **சேலம் மாவட்டம்:** ஓமலூரைச் சேர்ந்த வசந்தி நிலத்தகராறு காரணமாக ஓமலூர் காவல்நிலையத்தில் புகார். ஓமலூர் காவல் | லஞ்சம் | தினமலர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலைய எஸ்.ஐ.யாக பணிபுரியும் பெருமாள்(53) வழக்கை விசாரிக்க ரூ. 2,000 லஞ்சம் கேட்டதாக புகார். எஸ்.ஐ. பெருமாள் கைது. | | |
| 2066. | 12.08.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மாவட்டத்தில் லஞ்சப்புகாருக்கும் ஆளான ஒத்தக்கடை சிறப்பு எஸ்.ஐ., சாலைமுத்து, திருமங்கலம் டவுன் ஏட்டுசிவலிங்கம் இருவரும் பணியீடைநீக்கம் செய்து எஸ்.பி.ஆஸ்ராகார்க் உத்தரவு. | லஞ்சம் | தினமலர் |
| 2067. | 12.08.2011 | **சென்னை மாவட்டம்:** மன்னார்குடியைச் சேர்ந்த அமித்சிவில் ராயப்பேட்டை பாலாஜி நகரில் நிலம் வாங்கினார். தனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்யக்கோரி பூந்தண்டலம் வி.ஏ.ஓ, ஸ்ரீதரிடம் மனு. பட்டா மாற்றம் செய்ய வி.ஏ.ஓ ரூபாய் 3,500 லஞ்சம் கேட்டதாக புகார். வி.ஏ.ஓ.ஸ்ரீதர் கைது. | லஞ்சம் | தினமலர் |
| 2068. | 12.08.2011 | **மதுரை மாவட்டம்:** எல்லீஸ்நகர் போடி லைனைச் சேர்ந்தவர் சாந்தி(32). ஜெய்ஹிந்தபுரத்தைச் சேர்ந்த சம்சுதீன்(29) அடிக்கடி பணம் கேட்டு தொந்தரவு செய்ததாக சாந்தி புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை மிரட்டல் | தினமலர் |
| 2069. | 12.08.2011 | **கோவை மாவட்டம்:** நாகர்கோவிலைச் சேர்ந்த அருள்ராஜ் வழக்கு ஒன்றில் கோவை சிறையில் 2009 முதல் அடைக்கப்பட்டார். 11.08.2011 மாலை சிறை வளாகத்திலேயே தூக்கிட்டுத் தற்கொலை. | சிறைக்கைதி தற்கொலை | டெக்கான் கிரானிக்கல் |
| 2070. | 12.08.2011 | **திருச்சி மாவட்டம்:** சோமரசம்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சுண்ணாம்புக்காரன்பட்டி சங்கர் மனைவி கவிதா. கணவன் மனைவி குடும்பத்தகராறில் கவிதாவை கிணற்றில் தள்ளி கொலை செய்ததாக சங்கர் மீது புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | Hindu |

மக்கள் கண்காணிப்பகம்